புதுமலர் : 06 இதழ் : 06

கார்த்திகை - மார்கழி

# அனல்

இணை ஆசிரியர்கள்
பேரா. நிக்சன்
வே. மகாராஜா

அசதியாயிராமல் ஜாக்கிரதையாயிருங்கள் :

ஆவியிலே அனலாயிருங்கள்

கர்த்தருக்கு ஊழியம் செய்யுங்கள்

ரோமர் 12:11

சீயோன் தேவாலய பிரசுரம்

ZION CHURCH PUBLICATION

01.11.2009

## பொருளடக்கம்


- அனலின் குரல்
- கதையும் கற்றதும் - யன்னல்
- இத்தனை பாரமா
- வாலிபர் வளாகம்
- வினாவிடை - 36
- நற்செய்திப்பகுதி - தியாகம் இதுதான்
- வித்திடும் வித்தகர்கள்
- குறுக்கெழுத்துப் போட்டி - 34
- பக்தர்களின் பயிலகம்
- மூவரி முத்துக்கள்
- யூபிலி
- சீயோன் தேவாலயம்


## ஜெப வேண்டுதல்

வியாதியினாலும் வேதனையினாலும் குடும்பப் பிரச்சினையினாலும் கலக்கமுற்று என்ன செய்வது என்று அறியாமல் திகைக்கும் தாயே, தந்தையே, சகோதரனே, சகோதரியே கலக்கம் வேண்டாம். உங்கள் பிரச்சினைகளையும் தேவைகளையும் எங்களுக்கு எழுதுங்கள் உங்களுக்காக ஜெபிப்போம்.

### எழுதவேண்டிய விலாசம்


சீயோன் ஜெபக்குழு
347, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம், இலங்கை.

Zion Prayer Group
347, Navalar Road,
Jaffna, Sri Lanka.

மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

The Editor "Anal"
347, Navalar Road,
Jaffna, Sri Lanka.

ஆசிரியர் "அனல்"
347, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம், இலங்கை.

T.P. : 0094(0) 21-222 2707 e-mail: jazion@sltnet.lk


திக்கற்றவர்களாய் போகும் உன் பிள்ளைகளை ஒப்புவி. நான் அவர்களை உயிரோடே காப்பாற்றுவேன், உன் விதவைகள் என்னை நம்புவார்களாக. எரேமியா 49:11



# அனலின் குரல்

அன்பின் வாசக உள்ளங்களே; இயேசுக் கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள். இந்த ஆண்டின் இறுதி அனலின் மூலமாக உங்களை சந்திக்க கிருபை செய்த கர்த்தருக்கு கோடி நன்றிகள்.

இவ்வாண்டு பூராகவும் தம் கிருபையால் முடி சூட்டி சகல வழிகளிலும் தாங்கி, பாதுகாத்து, தேவைகளை சந்தித்து, வியாதி வேளைகளிலே கூட இருந்து குணப்படுத்தி, குறைவின்றி போஷித்த பரம தேவனுக்கு ஸ்தோத்திரங்கள். மேலும் அனல் இந்த ஆண்டு முழுவதும் உங்கள் கரங்களுக்கு கிடைக்க வழி செய்து உதவி செய்தார். அவருக்கே சகல மகிமையும் உண்டாகட்டும்.

இந்த ஆண்டு எமது சபை தனது 50வது ஆண்டை நிறைவு செய்கின்றது. இந்த 50 ஆண்டுகளும் கர்த்தர் தம் சபையை தாங்கி, சத்துருவின் சதி மோசங்களுக்கு விலக்கி பாதுகாத்து, தம்முடைய அருட்பணியை தொடர்ந்து செய்வதற்கு சபைக்கு சத்துவம் கொடுத்து வருகிறார். வரும் காலங்களிலும் இயேசுக்கிறிஸ்து தாமே தம் சபைக்கு தொடர்ந்து தலையாய் இருந்து, பாதாளத்தின் வாசல்கள் சபையை மேற்கொள்ளாத படி பாதுகாப்பாராக.

இந்த யூபிலி ஆண்டில் தொடர்ந்து சபை கர்த்தருடைய வல்லமைக்குச் சாட்சியாகவும், வசனத்தில் வழுவாததாகவும், தேவனுடைய சுவிஷேசத்தை பரப்பி, கிறிஸ்துவுக்காக ஆத்துமாக்களை ஆதாயம் செய்து, இருண்ட உலகில் கிறிஸ்துவின் ஒளி வீசி, பாவ அடிமைத்தனத்தில் இருப்போரை கிறிஸ்துவின் விடுதலைக்கு நேராக நடத்தும் படி அனலின் வாழ்த்துக்கள்.

பிரியமான வாசகர்களே! சீயோன் தேவாலயத்தின் இந்த விடுதலையின் ஆண்டில் மெய்யான விடுதலையை நீங்கள் கிறிஸ்துவுக்குள்ளாக பெற்று வாழுங்கள்.

**ஆசிரியர்.**

கதையும் கற்றதும்

# யன்னல்

புதிதாக திருமணமான ஒரு தம்பதியினர் ஓர் புதிய வீட்டிற்குள் குடியேறினார்கள். புதிய சூழ்நிலை, புதிய சுற்றாடல், புதிய சுற்றுப் புறத்தார், புதுப்புது சவால்கள், என அவர்கள் மனம் பரபரப்பால் நிறைந்திருந்தது. தமது பொருட்களை ஒழுங்கு படுத்துவதிலும், வீட்டை அலங்கரிப்பதிலும் இருவரும் மும்முரமாக ஈடுபட்டனர். அடுத்தநாட்காலை இருவருமாக காலை உணவை அருந்திக் கொண்டிருந்தனர். அப்பொழுது அந்த மனைவி அருகேயிருந்த யன்னலினூடாக அயல்வீட்டிலே குடியிருக்கும் பெண் தான் துவைத்த ஆடைகளை வெய்யிலிலே உலரப் போடுவதை அவதானித்தார். அது அவளுக்கு ஆச்சரியமாக இருந்தது. ஏனெனில் அந்த ஆடைகள் கழுவப்பட்டிருந்தும் அழுக்காகவே தென்பட்டன. ''இது என்ன! ஆடைகளை இப்படியா கழுவுவது? அவருக்கு ஒழுங்காக ஆடைகளை கழுவத் தெரியவில்லை. அல்லது அவர் பாவிக்கும் சவர்க்காரம் சரியில்லை போல!'' என மனைவி கூறினாள். கணவன் வெளியே பார்த்துவிட்டு அமைதியாக இருந்து விட்டார்.

ஒவ்வொரு முறையும் அந்த அயல் வீட்டுப்பெண் ஆடைகளை உலரப்போடும்போது இவர் இதனை அவதானித்து இப்படியே சொல்லி வந்தார். சில நாட்களுக்குப் பின், ஒருநாள் அந்த மனைவி யன்னலினூடாக அப்பெண் துணி உலரப்போடுவதைப் பார்த்து அதிசயப்பட்டாள். ஏனெனில் அவை துப்பரவாகவும், அழகாகவும் தென்பட்டன. அவள் தனது கணவனிடம் ''பாருங்கள்! கடைசியாக ஒருவாறு ஆடைகளை எப்படி சரியாகத் துவைக்க வேண்டும் என்பதை அவர் கற்று விட்டார். துணிகள் எவ்வளவு அழகாக இருக்கின்றன எனப் பாருங்கள்'' என்றாள். ''யாரோ அவருக்கு சொல்லிக் கொடுத்திருக்கிறார்கள் போல'' என்றாள்.

அதற்கு அவள் கணவன் மெதுவாக ''இன்று காலை தான் நான் எழுந்து எமது யன்னல் கண்ணாடியை துப்பரவு செய்தேன். அதை துப்பரவாகக் கழுவினேன்'' என்று கூறினார். மனைவிக்குத் தூக்கிவாரிப் போட்டது.

இப்படித்தான் எம் வாழ்விலும் காரியங்கள் நடக்கின்றன. நாம் மற்றவர்களைப் பார்க்கும் பார்வை நாம் பார்க்கும் யன்னலின் தன்மையில்தான் தங்கியுள்ளது. எனவே எமது சிந்தை என்னும் யன்னல் எப்போதுமே சரியான நிலையில் இருக்கிறது என்பதை உறுதிப் படுத்திக் கொள்வோமானால் நாம் அநேகருக்கு ஆசீர்வாதமாக இருப்போம். அத்துடன் தேவனுக்கும் பிரியமான பிள்ளைகளாகவும் இருப்போம்.

கெ. இன்பரூபன்.

# இத்தனை பாரமா! சுமக்க முடியவில்லையே

வாழ்வின் நடுப்பிராயத்தில் ஒரு அன்னையை சந்தித்தேன் வயது 55-60 வரை இருக்கும் அவள் அடிக்கடி சொன்ன வார்த்தை ''சுமக்க முடியவில்லையே" - காரணம் பிள்ளையின் மரணம்; மருமகன் மரித்ததால் - விதவையாக நிற்கும் மகளும் 2 பேரக்குழந்தைகளும் இவர்களை எப்படி சுமந்து செல்ல போகின்றேன்.

இதே தாயார் போன்று எத்தனையோ ஆண்களும், பெண்களும், தவியாக தவிக்கின்றார்கள். பல்வேறு காரணம், வேலையற்ற கணவன், குடிக்கு அடிமையான கணவன் குடும்ப பொறுப்பு அற்ற பிள்ளைகள்.

ஏனோ தானோ என நோக்கமற்ற வாழ்வு இதனால், காரியங்களை ''சுமக்கமுடியவில்லை, குடும்ப பொறுப்புக்களை சுமக்க முடியவில்லை, தலைக்கு மேலே கடன் தொல்லை, சுமக்க முடியவில்லையே. எத்தனை எத்தனை விதமான பாரங்கள். எத்தனை விதமான அழுத்தங்கள்; இன்று வியாதிகள் மேல் வியாதி, நித்திரை அற்ற இரவுகள். உடல் சோர்ந்து - அயர்ந்து போகும போது மனமோ, நிலையற்று, குளம்புவதால், தூங்க முடியவில்லை. தூங்க நினைத்தாலும், மனமோ தூங்க வில்லை. ஐயோ! சுமக்க முடியவில்லை.

பிள்ளைக்கும், மனைவிக்கும் இடையில் நின்று போராடும் தலைவர்கள் எத்தனைபேர், குடும்ப பாரத்தால் கதறும் தாய்மார் எத்தனை பேர். வேலைத் தளத்தில் நீதிக்கும், அநீதிக்கும் இடையில் நிற்கும் மக்கள் எத்தனை பேர் தமது பக்கம் நியாயம் இருந்தும் நியாயப்படுத்த முடியவில்லையே! ஐயோ எனது பாரத்தை சுமக்க, அல்லது ஒரளவு பகிர்ந்து கொள்ளவும் யாரும் இல்லையே என கலங்கும் கோடிகள் உண்டே.

பரி. வேதாகமத்தில் பாவங்களால் சுமக்க முடியாது தவித்த தாவீது அரசன் ''வீட்டின் மூலையில் தனித்து அலறும் ஆந்தைக்கு ஒப்பாக இருக்கின்றேன்" என்று கதறினான். அதேவேளையில், தனிமை என்பது கொடுமையான, சுமக்க முடியாத பாரமே. சுமக்க முடியவில்லையே.... இவ்வாறு எத்தனை எத்தனை சூழ்நிலைகள் ஆயினும் சுமைகளை இறக்கி வைப்பது எங்கே? யார் மீது? எப்படி? இவ்விதமான பல கேள்விகள் எழும்பலாம். சில வேளைகள் நாம் - யாரையும் நம்ப முடியவில்லையே? நம்பியவர்கள் மோசம் போக்கி பாரத்தை இன்னும் அதிகரித்து விட்டார்களே நம்பிக்கைக்கு உரியவர்களாகியவர்களே எமக்கு விரோதமாக; சந்தேகப்படுகிறார்கள் இப்படி எத்தனையோ பாரங்கள் - சுமக்க முடியவில்லையே.

மனதுக்குள் யாவையும், புதைத்து புதைத்து, மனம் கனத்து, இதயம்

பதை பதைத்து உள்ளம் உடைத்து, கண்ணீர் வடிக்கும் மாந்தரே; உனக்குத்தான் உன் பிரச்சினைக்குதான் முடிவு இல்லையா?...உண்டு மகனே, மகளே - ''உன் நெஞ்சை எனக்குத்தா"சகலவிதமான - உணர்வுகள், உணர்ச்சிகளின் இருப்பிடமே மனம்/ஆத்துமா - இதில் இருந்தே கவலைகளும், சந்தோஷங்களும், சந்தேகங்களும் தோன்றி, மறைகின்றது. இந்த ஆத்தும குளப்பம் அடையும்போது ஆறுதல் அளிக்கும் ஒரே ஒரு நபர் இறைமகன் இயேசுவே, அவர் தாம் எம்மை சிருஸ்டித்தவர்; தாயின் கர்ப்பத்தில் இருக்கையிலே, பெயர் சொல்லி எம்மை அழைத்தவர்; எமது தலையில் உள்ள மயிர் அனைத்தும் எண்ணி கணக்கு வைத்துள்ளவர்! எமது உட்காருதலையும், எழுந்து இருத்தலையும் நன்கு அறிந்து இருக்கின்றார். அவருக்கு மறைவானது ஏதும் இல்லை. அவர் எம்மை நேசிக்கின்றார். எந்த அளவிற்கு - தனது ஜீவனை எமக்கு கொடுக்கும் அளவிற்கு; எமது பாவத்தை பூரணமாக மன்னிக்கும்படிக்கும், குற்ற மனச்சாட்சி நீங்கும்படிக்கும், தனது திரு இரத்தத்தால் எமது பாவம் அனைத்தையும் கழுவி நம்மை சுத்திகரிக்கும்படி அவர் தம்மை தாமே எமக்காக அர்ப்பணித்தார். அந்த இயேசு மரித்து 3ம் நாள் ஜீவனுடன் எழுந்தருளி இருக்கின்றார். அவர் இன்றும் நம் நடுவில் ஜீவிக்கின்றார். அவர் இன்றும் அற்புதம் செய்கின்றார்.

கர்த்தர் மேல் உன்பாரத்தை வைத்து விடு. அவர் உன்னை ஆதரிப்பார்."இன்று நீ தயங்காமல் உன் அனைத்து பாரத்தையும், கவலைகளையும் வேதனையையும், அவர் மேல், விசுவாசத்துடன் வைத்து விடு. அவர் உன்னை ஆதரித்து உனக்கு பூரணமான விடுதிலை தருவார்.

''**இயேசு சுமந்து கொண்டாரே. நீ சுமக்க தேவை இல்லை.**"

போல் கி.சோ.

## குறுக்கெழுத்துப் போட்டி 33 சரியான விடைகள்

**இடமிருந்து வலமாக**

01. நேபுகாத்நேச்சார்
04. தலைச்சன்
08. ஆலயம்
09. திக்

**வலமிருந்து இடமாக**

03. இன்பம்
10. தம்

**மேலிருந்து கீழாக**

02. புலம்பல்
03. இருதயம்
07. நேசர்
10. தன்

**கீழிருந்து மேலாக**

05. தச்சன்
06. துன்மார்கர்
08. ஆரோகணம்




## அறுப்பு மிகுதி
## வேலையாட்களோ கொஞ்சம்;
## *The harvest truly is great , but the labourers are few:*

**இயேசுக் கிறிஸ்துவின் நாமத்தில் என் அன்பின் வாழ்த்துக்கள்.**

இயேசு தாமே தம்மால் தெரிந்து கொள்ளப்பட்ட பிள்ளைகளிடம் காண்பிக்கும் காட்சி இதுவேயாகும். இன்னமும் தொழுவத்திலே சேர்க்கப்பட வேண்டிய அனேகர் உண்டு கிறிஸ்துவின் சிலுவை அண்டை அவர்களை நடத்திடும் பொறுப்பு உனக்கும் உரியதாகும். சீக்கிரமாய் முழுமனதுடன் இப்பொறுப்பை நீ ஏற்று அவருக்காக ஒரு உண்மையான **வேலையாளாக** செயற்படுவாயாக.

### வேலையாளர் (LABOUR)

வேலையாட்களின் எண்ணிக்கை மிகக் குறைவாகவே உள்ளதாக இயேசு கூறியுள்ளார். இதன் விளக்கம் என்ன? மெய்யாகவே எஜமானுடைய விருப்பத்தை அறிந்து அதற்கு தன்னை முற்றிலும் அர்ப்பணித்து அவரின் சித்தத்தை, விருப்பத்தை மாத்திரம் நிறைவேற்றும் வேலையாட்கள் மிக சிலரே. ஆத்துமாக்கள் நரகம் போகாமல் அவர்களை நித்திய தேவராஜ்ஜியத்துக்குள் நடத்தும் வேலையை நீ அவருக்காய் அவரின் எஜமானத்துவத்தை அசட்டை பண்ணாமல் அவருக்காய் செயல்பட உன்னையும் அன்பாய் அழைக்கிறார்.

நீ அவருக்கு (இயேசுக்கிறிஸ்துவுக்கு) வேலையாளாக செயல்பட உன்னை முற்றிலுமாக ஒப்புக் கொடுப்பாயா? உனக்கு உன்னில் எந்த உரிமையும் இல்லை; அனைத்து உரிமையும் எஜமானுக்கு உரியதே என்பதை அங்கீகரித்து அவரின் வேலைத்தளத்தில் முழுமூச்சாக செயல்பட வருவாயா சகோதரனே சகோதரியே.

- ✞ எஜமானின் அழைப்புக்கு தன்னை முற்றிலும் அர்ப்பணித்தவன். தனது தாலந்து, செல்வம், கல்வி, தொழில் தனது எதிர்காலம்
- ✞ அறுப்பை எப்போதும் எதிர்பார்ப்பவன் – ஆத்துமாக்களுக்காக செலவு பண்ணவும், செலவுபண்ணப்படவும் விரும்புபவன். (2கொரி 12:15)
- ✞ சுய விருப்பங்களுக்கும், தன் சித்தத்திற்கும் மறுப்பு கூறி சிலுவையில் மரிக்க வேண்டும், தன்னை தானே பிரியப்படுத்த கூடாது. (லூக்கா 9:23)
- ✞ கலப்பையின் மேல் தன் கையை வைத்துப் பின்னிட்டுப்பார்க்க கூடாது – அர்ப்பணிப்பின் பின் அங்கலாய்ப்பு கூடாது. (லூக்கா 9:62)
- ✞ சீர் கேடான வீண் பேச்சுக்கு விலகியிருப்பவன் – தேவநாமத்துக்கு மகிமையை கொண்டு வராத பேச்சுக்களை தவிர்ப்பவன். (2 தீமோத் 2:16)
- ✞ கற்று நிச்சயித்துக் கொண்டவைகளில் நிலைத்திருப்பவன். (2தீமோத் 3:14)

உன்னையும் தனக்கு ஒரு வேலையாளாக்க துடிக்கும் இயேசுவின் இதயத்துடிப்பை உணராமல் இருப்பாயோ? வாஎன்று உன்னை அழைக்கின்றார்.

## அறுவடைக்கு இயேசு பயன்படுத்திய பாத்திரங்கள்.

*சமாரியஸ்திரி (யோவான் 4)*

வாழ்க்கையிலே பாவத்தையே அணைத்துக் கொண்டு இருந்தவளை இயேசு சந்தித்த போது; அவளுடைய அணைப்பு எல்லாம் ஆத்துமாக்களாய் இருந்து. அவள் ஊருக்குள்ளே போய் ஜனங்களை நோக்கி நான் செய்த எல்லாவற்றையும் ஒருவர் எனக்கு சொன்னார். அவரை வந்து பாருங்கள் அவர் கிறிஸ்துதானோ என்றாள். இதை வாசிக்கும் சகோதரனே (தரியே) நீ எப்படியான நிலமையில் இருந்தாலும் அவரை விசுவாசித்து, பாவங்களை அறிக்கை செய்து மனம் திரும்புகின்றபோது நீயும் கூட அவருக்காய் திரளான அறுவடை செய்ய முடியும்.

*பிலிப்பு (அப்போஸ்தலர் 8)*

அங்குள்ளவர்களுக்கு கிறிஸ்துவைக் குறித்துப் பிரசங்கித்தான். அறுவடைப் பணியிலே நீ பாவிக்க வேண்டிய அறுவடையின் கருவி, அன்பின் செய்தி, கிறிஸ்து வைக் குறித்தேயாகும். மிகுதியான அறுவடையை உன் கண்கள் காணவில்லையோ எப்போது எம் தேசம் முழுமையாக கிறிஸ்துவை அறியப் போகின்றது. நீயும் அவரது வேலை தளத்திற்கு வர வேண்டியது அவசியமாயும், அவசரமாகவும் உள்ளது.

அந்த பட்டணத்திலே மிகுந்த சந்தோஷம் உண்டாயிற்று. பட்டணங்களிலே, கிராமங்களிலே, குடும்பங்களிலே சந்தோஷத்தை தேசங்களிலே உண்டாக்க வேண்டுமானால் நீயும் இயேசுக்கிறிஸ்துவுக்கு ஓர் நல்ல வேலையாளாக வேண்டும். வருவாயா?

இருக்கின்ற வண்ணமாக இயேசுவிடம் வா
இவ்வுலகத்தை குறித்த கவலையை விட்டு வா
இவர் அவரை பார்த்து வராதே....
இன்பர் இயேசுவையே நோக்கி வா
இதயத்தில் சிலுவைகாட்சி பொங்கி வா.

தேவராஜ்ஜியத்துக்காய் ஆத்துமாக்களை அறுவடை செய்வோம். மந்தைசேரா ஆடுகளை நல் ஆயனாம் இயேசுவிடம் சேர்ப்போம்.

*செல்லுகிறதை காதுள்ளவன் கேட்கக் கடவன்*

கிறிஸ்துவின் பணியில
**வேதநாயகம் சுமணன**

## வினாவிடை 36

*01.* "கூனி" இவன் யாருடைய குமாரன்
*02.* பேன், உன்னி இவர்கள் யார்?
*03.* "ஓர்" என்னும் மலை எங்கே உண்டு
*04.* 153 பெரிய மீன்கள் பிடிபட்டது எங்கே
*05.* "ஆர்" என்னும் ஊர் எங்கே உள்ளது
*06.* மீன் வாசலை கண்டினவர்கள் யார்?
*07.* நான் கிழவன் என்று சொன்னது யார்?
*08.* சிறிய அடையைக் கேட்டது யார்?
*09.* பாவிகளை இரட்சிக்க வந்தவர் யார்?
*10.* "நீயே அந்த மனுஷன்" இவர் யார்?

### குறுக்கெழுத்துப் போட்டி 33 சரியான பதில்கள் எழுதியவர்கள்

01. S. மாக்கிரட் - மீசாலை
02. நா. சிவபாக்கியம் - காரைநகர்
03. நா. கிறிஸ்தீனா - காரைநகர்
04. மா. பூமணி - யாழ்ப்பாணம்
05. நா. தர்ஷினி - யாழ்ப்பாணம்
06. S. மனோகரி - நீர்வேலி
07. M. பாமினி - இருபாலை

# தியாகம் இதுதான்

உண்மையாக முற்றிலும் இயேசு கிறிஸ்துவுக்குத் தன்னைச் சமர்ப்பித்திருக்கின்ற ஒரு மனிதனுக்கு உயிரோடிருப்பதோ அல்லது மரிப்பதோ பெரிய காரியமல்ல. கர்த்தர் மகிமைப்படவேண்டும் என்பதுதான் முக்கியம்.

''ஜீவனாலகிலும், சாவினாலகிலும், கிறிஸ்து என் சரீரத்தினாலே மகிமைப்படுவார்..." (பிலி. 1:20). ஜிம் எலியட் என்பவர் எழுதியுள்ளவற்றில் இந்தச் சத்தம் கேட்கிறது. வீட்டன் கல்லூரியில் அவர் மாணவனாய் இருக்கும்போதே. ''அவுக்கா இனத்தினருக்காக மரிக்க நான் ஆயத்தமாயிருக் கிறேன்" என்று தம் நாள் குறிப்பேட்டில் எழுதிவைத்தார்.

''பிதாவே, என் வாழ்க்கையை ஆம், உமக்குச் சித்தமானால் என் இரத்தத்தை, எடுத்து உம் அக்கினியால் எரித்துவிடும். நான் அதை பத்திரப்படுத்தி வைக்கமாட்டேன். ஏனெனில் அது என்னுடையதல்ல. எடுத்துக் கொள்ளும், ஆண்டவரே எல்லாவற்றையும் எடுத்துக் கொள்ளும், உலகத்திற்காக என் ஜீவனைக காணிக்கையாக ஊற்றிவிடும். உம் பலிப்பீடத்தின் முன் ஓடும் பொழுது மட்டுமே இரத்தத்திற்கு மதிப்புண்டு." இது அவர் மற்றோர் சமயம் எழுதியது.

கடவுளின் வீரரில் பலர் அவரோடு அடைந்த அனுபவத்தில் இதே இடத்தை அடைந்தார்கள் என்று தோன்றுகிறது. ''கோதுமை மணியானது நிலத்தில் விழுந்து சாகா விட்டால் தனித்திருக்கும். செத்ததேயாகில் மிகுந்த பலனைக் கொடுக்கும்" (யோவான் 12:24) என்பதை அவர்கள் உணர்ந்துள்ளனர். அந்தக் கோதுமை மணியாயிருக்க அவர்கள் விரும்பினர். இரட்சகர் தம் சீடருக்குக் கற்பித்த உளப்பான்மை இதுதான். '' என்னிமித்தமாகத் தன் ஜீவனை இழந்து போகிறவன் அதை இரட்சித்துக் கொள்வான்" (லூக்கா.9:24).

முதற்கண், நம் ஜீவன் நம்முடையதே அல்ல. விலை மதியாத தமது இரத்தத்தைக் கிரயமாகச் செலுத்தி நம்மை மதித்தவருக்கே அது உரிமை யானது. மற்றொருவருக்குச் சொந்தமான ஒன்றை சுயநலமாக நாம் பற்றிப் பிடித்துக் கொண்டிருக்கலாமா? சீ.டி. ஸ்டட் தமக்குத்தாமே விடையளித்துக் கொண்டார்.

நற்செய்திப் பகுதி

''இயேசுவானவர் எனக்காக மரித்தார் என்பதை நான் அறிந்திருந்தேன். ஆனால் அவர் எனக்காக உயிர்துறந்திருந்தால் நான் எனக்குச் சொந்த மானவரல்ல என்பது எனக்குப் புரியவேயில்லை. ''மீட்பு" என்பது 'திரும்ப வாங்குதல்' ஆகும். எனவே நான் அவருக்கு உரியவன்

என்றால் எனக்குச் சொந்தமல்லாத ஒன்றை வைத்திருந்தது திருடனாக இருக்க வேண்டும். அல்லது அனைத்தையும் அவருக்கு ஒப்படைக்கவேண்டும். இயேசு கிறிஸ்து எனக்காக மரித்தார் என்பதை நான் அறிந்த பின்னர் அவருக்கு எல்லா வற்றையும் காணிக்கையாக்குவது கடினமாயிருக்கவில்லை."

இரண்டாவது, கர்த்தர் வரத் தாமதிப்பாரானால் எப்படியும் நாம் எல்லாரும் இறக்கப்போகிறோம். இராஜாவின்சேவையில் உயிர் துறப்பதா? அல்லது எல்லோரும் சாவதைப்போல சாவதா? எது துக்கத்துக்குரியது? ''இழக்க முடியாத ஒன்றைப் பெறுவதற்காகத்தான் பிடித்துவைத்துக் கொள்ளக்கூடாத ஒன்றை விட்டுவிடுகிறவன் அறிவற்றவன் அல்ல" என்று ஜிம் எலியட் கூறியது சரி அல்லவா?

மூன்றாவது, கர்த்தராகிய இயேசு நமக்காக மரித்திருந்தால் அவருக்காக உயிர் நீப்பதுதான் நாம் செய்யக்கூடிய மிகச்சிறிய செயல். இது எதிர் பேச முடியாத நியாயம். பணியாள் தலவனைக்காட்டிலும் உயர்ந்தவனல்ல. அப்படியானால் கர்த்தராகிய இயேசு சென்ற வழியைக் காட்டிலும் சௌகரியமான ஒரு வழியில் விண்ணுலகினுள் நுளையநமக்கு என்ன உரிமையுண்டு? இதை சிந்தித்துப்பார்த்ததின் பயனாகத்தான் ஸ்டட் பின் வருமாறு சொல்ல ஏவப்பட்டார். ''இயேசு கிறிஸ்து கடவுளாக இருந்து எனக்காக உயிர்விட்டிருப்பாரானால் அவருக்காக நான் செய்யும் எந்தத் தியாகமும் மிகப்பெரியதாகி விடாது."

முடிவாக, நம் வாழ்க்கையைக் கட்டி அணைத்துக்கொள்ளுதல் குற்றமான செயல். ஏனெனில் அதைதுணிந்து கைவிடுவதன்மூலம் நித்தியநன்மை பிறருக்குப் பாய்ந்தோடக்கூடும். மருத்துவ ஆய்வுக்காக சிலர் தங்கள் வாழ்க்கையைச் செலவிடுகின்றனர் தீப்பற்றியெரியும் கட்டடங்களிலிருந்து தங்கள் அன்புக்குரியவர்களை விடுவிக்க சிலர் உயிர்துறக்கின்றனர். பகைவரின் வல்லமையினின்று தங்கள் நாட்டைக்காக்க போரில் மடிகின்றனர். வேறு சிலர். மாந்தரின் ஜீவனுக்கும் நாம் தரும் மதிப்பென்ன? மையர்ஸ் என்பவரோடு சேர்ந்து பின்வருமாறு நாமும் கூறமுடியுமா?

**"ஆன்மாக்களாகவே காண்கிறேன் மாந்தரை**
**ஆளப்பிறந்தோர் அடிமைகள் ஆயினர்**
**நளையிடப்பட்டனர் வெற்றிக்குரியவர்**
**இளைப்புற்ற அவர்கள் நம்பிக்கை கண்டிலர்.**

**எனக்குள் எழுந்த இந்நிலை கண்டதும்**
**மனத்தை உந்தும் மாளா வாஞ்சை**
**ஈடேற வேண்டுமே இவர்கள் அனைவரும்**
**ஈவேன் என்னுயிர் இவர்க்காய் மடிவேன்"**

இரத்த சாட்சிகளாக மரிக்க எல்லாரும் கேட்கப்படுவதில்லை ஈட்டியும் கழுமரமும், கழுத்தை வெட்டும் கருவியும் தெரிந்தெடுக்கப்பட்ட சிலருக்காகவே ஒதுக்கிவைக்கப்பட்டுள்ளன. ஆனால் நாம் ஒவ்வொருவரும் இரத்த சாட்சியின் ஆவியை, இரத்தசாட்சியின் பக்தியைப் பெற்றவர்களாயிருக்கமுடியும். ஏற்கனவே

கிறிஸ்துவுக்காகத் தங்கள் உயிரைக் கைவிட்டு விட்டோர்போல நாம் ஒவ்வோரு வரும் வாழமுடியும்.

***"நன்மையோ தீமையோ வருவது வரட்டும்***
***இன்னல் குருசோ பொன்முடி தானோ!***
***அன்பின் இறைவன் மிதித்து உழுதிட***
***என்னுடல் உள்ளம் எறிந்தேன் கீழே."***

அருமை நண்பரே வாசித்துவிட்டு வீசிவிடும் பக்கமல்ல இது யோசித்து முடிவெடுக்கும் பக்கம் இதுவாகும்.

**எனவே இச் சத்தம் உன்னை மாற்றட்டும். தேவன் தாமே உன்னை ஆசீர்வதிப்பாராக.**

---

♠ ஆதிமுதல் இருந்ததும், நாங்கள் கேட்டதும், எங்கள் கண்களினாலே கண்டதும், நாங்கள் நோக்கிப் பார்த்ததும், எங்கள் கைகளினாலே தொட்டதுமாய் இருக்கிற ஜீவ வார்த்தையை குறித்து உங்களுக்கு அறிவிக்கின்றோம்.

♠ அந்த ஜீவன் வெளிப்பட்டது; பிதாவினிடத்திலிருந்ததும், எங்களுக்கு வெளிப்பட்டதுமான நித்தியமாய் இருக்கிற அந்த ஜீவனை நாங்கள் கண்டு, அதைத் குறித்துச் சாட்சி கொடுத்து, அதை உங்களுக்கு அறிவிக்கின்றோம்.

♠ நீங்களும் எங்களோடே ஐக்கியமுள்ளவர்களாகும் படி, நாங்கள் கண்டும் கேட்டும் இருக்கிறதை உங்களுக்கும் அறிவிக்கின்றோம்; எங்களுடைய ஐக்கியம் பிதாவோடும் அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவோடும் இருக்கின்றது.

♠ உங்கள் சந்தோஷம் நிறைவாய் இருக்கும்படி இவைகளை உங்களுக்க எழுதுகிறோம்.

♠ தேவன் ஒளியாய் இருக்கின்றார், அவரில் எவ்வளவேனும் இருள் இல்லை; இது நாங்கள் அவரிடத்தில் கேட்டு உங்களுக்கு அறிவிக்கின்ற விசேஷமாய் இருக்கிறது.

♠ நாம் அவரோடே ஐக்கியப்பட்டவர்கள் என்று சொல்லியும், இருளிலே நடக்கிறவர்களாய் இருந்தால் சத்தியத்தின் படி நடவாமல் பொய் சொல்லுகிறவர்களாய் இருப்போம்.

♠ அவர் ஒளியில் இருக்கிறது போல நாமும் ஒளியிலே நடந்தால் ஒருவரோடு ஒருவர் ஐக்கியப்பட்டருப்போம்; **அவருடைய குமாரனாகிய இயேசுக்கிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி, நம்மை சுத்திகரிக்கும்.**

♠ நமக்குப் பாவமில்லை என்போமானால், நம்மை நாமே வஞ்சிக்கின்றவர்களாய் இருப்போம், சத்தியம் நமக்குள் இராது.

♠ நம்முடைய பாவங்களை அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மை சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராய் இருக்கிறார்.

♠ நாம் பாவம் செய்யவில்லை என்போமானால், நாம் அவரைப் பொய்யராக்குபவர்களாக இருப்போம், அவருடைய வார்த்தை நமக்குள் இராது.

1யோவான் 1:1-10

# வித்திடும் வித்தகர்கள்

## ஹட்சன் டெய்லர்

தொடர்ச்சி


இப்பொழுது புதிய துறைமுகப் பகுதிக்குச் செல்லப்போகிறார்கள். கப்பல் வந்தது. ஹட்சனும் பார்ன்ஸூம் கப்பலில் ஏறினர். கப்பல் இரட்டைத் தீவை அடைந்தது. அங்குள்ள சிறிய முகத்துவாரப் பகுதி தான் ஸ்வாட்டோ. அங்குள்ள காண்டன் வியாபாரி ஒருவரைக் கண்டனர். உடனே பார்ன்ஸ் அவரோடு காண்டன் மொழியில் பேச ஆரம்பித்துவிட்டார்.

"நிறைய வேலை செய்ய வேண்டியதிருக்கிறது அவைகளைச் செய்ய முடியாதபடி மொழி பிரச்சினை தடையாயுள்ளது. வில்லியம் பார்ன்ஸிடமிருந்து மொழிைய்க் கற்றுக் கொள்ளுகிறேன். எனக்காக ஜெபியுங்கள்" என்று அவர் எழுதிய கடிதம் அன்னைக்கு வந்தது. ஸ்வாட்டோ ஒரு கொடிய இடம் என்பதை அவர்கள் அறிந்திருந்ததால் அதிக அக்கறையோடு ஜெபித்தார்கள் அதே கடிதத்தில் இவ்வாறும் எழுதப்பட்டிருந்தது.

"ஒவ்வொரு மாதமும் இருநூறு பெட்டிகளில், ஒரு பெட்டிக்கு நாற்பது பெட்டிகள் வீதம் ஒப்பியம் என்னும் போதைப்பொருள் வந்து இறங்குகிறது. இங்குள்ள பாமர ஜனங்கள் ஒப்பியம் சாப்பிடும் கெட்ட பழக்கத்தால் நிறைந்தவர்கள். அதே போன்று ஏராளமான கூலிக்காரர்களை ஆசை காட்டி கியூபா, ஹவானா, கல்லாவோ நாடுகளிலிருந்து கப்பலில் கொண்டு வருகிறார்கள். ஒரு கணிசமான தொகைக்கு இவர்களை அதன் தலைவன் விற்றுவிடுகிறான். அவர்கள் ஒரு குறிப்பிட்ட காலம் உழைக்க வேண்டும். உயிர் பிழைத்து மீண்டும் நாட்டுக்குத் திரும்பிச் செல்வோரின் எண்ணிக்கை மூன்றில் ஒரு பாகமே. ஒருதடவை கூலிக்காரர்களைக் கொண்டு வந்தார்கள். அவர்களை ஒருவன் விலைபேசி கொடுக்கையில், கைதிகளாக்கப்பட்டு விடுவோம் என்றறிந்த கூலிக்காரர்களில் சிலர் தப்பி ஓட கப்பலிலிருந்து குதித்தார்கள். அவர்கள் பிடிக்கப்பட்டு சவுக்குகளால் அடிக்கப்பட்டனர்."

தொடரும்

# குறுக்கெழுத்துப் போட்டி - 34



**இடமிருந்து வலம்**

1. தேவனுக்கு மகிமை உண்டாவதாக என சொல்லப்படும் சொல்
7. ஆவியின்.......... இல் ஒன்பது காரியங்கள் உண்டு
9. சாரமற்றால் உதவாது
8. இந்த சிலுவையை எடுத்துக் கொண்டு என்னை பின்பற்றக் கடவன்

**வலமிருந்து இடமாக**

5. இதில் 66 புத்தகங்கள் உண்டு
2. தாவீது இதை மீட்பதில் சிறந்தவர்
10. உபவாசத்தாலும் ஜெபத்தாலும் அன்றி இந்த......... பிசாசு போகாது என இயேசு கூறினார்.
7. கடினமான நிலையை குறிப்பதற்கு இச்சொல்லையும் பயன்படுத்துவர்

**மேலிருந்து கீழாக**

2. கொல்லவும் உயிர்ப்பிக்கவும் நான் தேவனா என்றவன் யார்?
4. இயேசு தம்மை சிலுவையில் அறைந்தவர்களுக்கு இதை பிதாவிடம் வேண்டினார்
1. நிலைத்திருப்பது / பெரியது இது
6. நிக்கொதேமு இந்த நேரத்திலே இயேசுவிடம் வந்தான்

**கீழிருந்து மேலாக**

4. பழைய ஏற்பாட்டின் கடைசிப் புத்தகம்
6. விசுவாசம் ........... தேவனுக்கு பிரியமாய் இருப்பது கூடாத காரியம்

## வினாவிடை 35 சரியான பதில்கள்

| | | |
|---|---|---|
| 01. எருசலேமில் | 02. யாக்கோபு | 03. பவுல் |
| 04. இயேசுவின் | 05. மோசே | 06. பிலேயாம் |
| 07. ஏசாயா | 08. மாயக்காரனின் | 09. சகரியாவிற்கு |

10. சொல்லப்பட்ட கட்டளைகளை மீறுகிறவர்களின் வீடு. எஸ்றா 6:11

## வினாவிடை 35 சரியான பதில் எழுதியவர்

01. S. மாக்கிரட் – மீசாலை




## ஆவிக்குரிய போராட்டம் 02

### 4. வேகம் (1நாளா 12:8)

எந்த யுத்தத்திலும் வேகமுள்ளவர்கள் வெல்லுவது இயற்கை போராட்டத்தில் நேரம் முக்கியமானது. தாமதம் ஜீவ நஸ்டத்தையும் தோல்வியையும் கொண்டு வரும். இன்று தேசத்தின் வயல்வெளிகள் அறுவடைக்கு ஆயத்தமாய் உள்ளது. யார் முதல் போவார் என்பதே கேள்வி. நாம் வேதத்ததுடன் அறுவடை செய்யும் படி விரைவாக செயல்படுவோமா? இன்றைய சபையின் மகா பெரிய பாவங்களில் ஒன்று - தாமதித்தல் அல்லது பின் போடுதல். நாம் அதிகமாக தாமதிக்கின்றோம். நாம் அதிக நேரம் தாழ்த்துகின்றோம். இயேசு இன்னும் அறுவடைக்கு 4 மாதங்கள் உள்ளது என சொல்ல வேண்டாம் உங்கள் கண்களை ஏறெடுத்துப் பாருங்கள் அது அறுவடைக்கு தகுதியாய் உள்ளது என்கின்றார்.

### 5. தைரியம் (1 நாளா 12:8)

காத்தியர் சிங்க முகம் உள்ளவர்கள் என வர்ணிக்கப்பட்டுள்ளார்கள். தைரியம் ஒரு வீரனிடம் காண வேண்டிய ஒரு முக்கிய தகமையாகும். உபா 20: 2-4ல் யோசுவாவுக்கு திடமாய் இருக்கும் படி புத்தி கூறப்பட்டது. யோசு 1:6,7,9 பிசாசு எம்மை தாக்கும் வழி எம் இருதயத்தில் பயத்தை போடுவதாகும். நாம் பயந்தவர்களாக இருந்தால் தேவன் எம்மை உபயோகிக்க முடியாது. பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம் எமக்கு பலத்தை தரும். பெந்தெகொஸ்தே நாளுக்கு முன் சீஷர்கள் யூதருக்குப் பயந்து இருந்தனர். பின்பு வசனத்தை தைரியத்துடன் பிரசங்கித்தனர். அப் 4:31. விடுவிக்கும் ஊழியத்தில் பிசாசு எம்மை மேற்கொள்ள முடியாது என்பதை நாம் அறிந்திருக்க வேண்டும். உண்மையில் அவைகள் தான் எமக்கு பயப்பட வேண்டும். லூக் 10:19 மனித பயம் எம்மை விட்டு அகல வேண்டும் ஏனெனில் அது ஒரு கண்ணியாகும். தேவபயம் எம்மை மனித பயத்தில் இருந்து விடுதலையாக்கும். எம் முகங்கள் சிங்க முகம் போல் இருக்க வேண்டும்.

### 6. ஞானம் (நாளா 12:32)

தாவீதிடம் செய்ய வேண்டியது இன்னதென்று அறிந்து கொள்ளும் மக்கள் இருந்தனர். இவர்கள் என்ன செய்ய வேண்டும் எனவும் அறிந்திருந்தனர்.

யுத்தங்கள் சரியான யுத்த தந்திரத்தினால் வெல்லப்படுகின்றது. திறமையுள்ள தளபதிகள் மேற்கூறியவற்றை கொண்டவர்களாக இருப்பர். இன்று தேவ சேனையிலும் இப்படிப்பட்டவர்கள் தான் தேவை. சரியான வேளையை அறிந்து கொள்ளுபவர் சபை என்னத்தைச் செய்ய வேண்டும் என அறிந்து கொள்ளக் கூடியவர்கள்.

## 7. நற்பழக்கம் (1நாளா 12:33)

செபுலோன் புத்திரரில் தங்கள் அணியைக் காத்து நிற்கக்கூடிய 50,000 பேர் உள்ளனர். இது நல் ஒழுக்கத்தை கட்டுப்பாட்டை குறிக்கின்றது சேனையில் ஒவ்வொரு மனிதனும் தன் நிலையை அறிந்திருக்க வேண்டும். இன்றைய முக்கய தேவையானது ஆவிக்குரிய அதிகாரத்தையும் ஒப்புக்கொடுத்தலையும் (கீழ்ப்படிதல்) அறிந்து கொள்வதேயாகும். இஸ்ரவேல் நியாயாதிபதிகளின் காலத்தில் பலவீனமாய் இருந்தார்கள். காரணம் ஒவ்வொருவனும் தன் தன் பார்வைக்கு சரியானதை செய்வதேயாகும். அடங்காமை எதிர்த்து நிற்பதற்கு சமமாகும். ஒரு சேனை வீரன் அடங்காது நின்றால், அவன் நியாய விசாரிப்புக்கு பாத்திரனாவான். அதிகாரத்தை அறிந்து அதற்கு கீழ்ப்படிதல் சேனையின் வெற்றிக்கு இன்றியமையாததாகும்.

## 8. தேறினவர்கள் (1நாளா 1:36)

இவர்கள் பயிற்சி எடுத்தவர்கள் மாத்திரமல்ல திறமை வாய்ந்தவர்கள், தேறினவர்கள். இன்று தேவ சேனைக்கும் இப்படிப்பட்டவர்களே தேவை பொருளாதார தரத்தை உயர்த்துவதில் யப்பான் வெற்றி கண்டது; காரணம் தொழில் நுட்பம். அதே போல நாமும் எல்லா நுட்பத்தையும் அறிந்து கொள்ள வேண்டும். இது நம்மை தேறினவர்களாக்கும் பவுல் கூட திமோத்தேயுவுக்குத் தேறினவனாக அவனைக் காண்பிக்க புத்தி சொன்னான்.

## 9. உத்தம இருதயம் (1 நாளா 12:38)

இவ் வசனத்தின் முடிவில் எல்லோரும் ஒரு மனப்பட்டிருந்தார்கள் எனச் சொல்கின்றது. இவர்கள் எல்லோர் இருதயமும் தாவீதை சார்ந்திருந்தது. இருதயம் பிரிக்கப்பட்டு இருக்கவில்லை. இவர்கள் தாவீதை ராஜாவாக்கு வதற்காக எபிரோனுக்கு வந்திருந்தார்கள். இதே வண்ணமாகத்தான் தேவசேனையும் இருக்க வேண்டும். இயேசுவை சார்ந்து இயேசுவின் ஆளுகையைக் கொண்டு வர வேண்டும். பேதம், வேற்றுமை ஐக்கியத்தை தகர்க்கும் ஒரே குறிக்கோளை அடைய வேண்டின் பேதத்தை களைந்து விட வேண்டும். எமக்கு ஒரே இலக்கு உண்டு. பிசாசு வைத்திருப்பதை இயேசுவுக்கு மாற்றுவதாகும்.

## 10. ஆயத்தம் – யுத்த சன்னத்தராக (1நாளா 12: 23, 24)

எல்லோரும் ஆயுதம் தரித்து ஆயத்தமாய் இருந்தார்கள். ஆயத்த மற்றிருப்பது மிக ஆபத்தானது. இவைகளே தாவீதின் சேனையில் உள்ளவர்களின் தன்மை.

தொடரும்

**(கர்த்தருடைய மகிமையில் பிரவேசித்த போதகர் இன்பருபன்)**

# மூவரி

# முத்துக்கள்

உயிரை விதைத்து
உயிரைப் பிடிப்பது
அருட்பணி

அணையாமல்
எரிவது
தேவ அன்பு

வட்டங்களை விட்டு
உலகை நோக்குபவன்
அருட்பணியாளன்

அள்ளித்தருவது எல்லாம்
அடைக்கல அன்பு
இயேசுவின் முகத்திலே

பாவத்தின் கோரம்
பதுமையாவது
பாடுகளின் பெலத்திலே

மறைபொருட்களின்
விளைவிடம்
வேதம்

வேத சத்தியத்தின்
ஆணிவேர்
பரிசுத்தாவியானவர்

தேவசித்தம் செய்ய
தேவையானது
பரிசுத்த விழி

என்றைக்கும் மாறாத
அடையாளம்
சிலுவை

உலகை வலம் வரும்
பெட்டகம்
சிலுவையே

தீயோனின் யூபிலி ஆண்டில் (50) அனலின் விடுதலையின் அறைகூவல்:

# யூபிலி - Jubilee

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமானவர்களே! எங்கள் சபையின் வரலாற்று முக்கியத்துவமான இவ் வேளையில் இயேசுகிறிஸ்துவின் இனிய நல் நாமத்தில் உங்கள் யாவருக்கும் என் வாழ்த்துதலும் தேவ சமாதானமும் உண்டாவதாக.

தேவனுடைய அளவற்ற பெரிதான கிருபையினாலே 1959 ஆம் ஆண்டு கர்த்தருக்குள் நித்திரையடைந்த போதகர் C.P.D அருமைநாயகம் அவர்களால் ஆரம்பிக்கப்பட்ட இவ் ஊழியமானது 2009 ஆம் ஆண்டு கார்த்திகை மாதத்தில் 50 ஆண்டுகளை நிறைவு செய்கின்றது. இது மனிதனின் செயலல்ல, தேவனின் பெரிதான கிருபை மாத்திரமே.

***''நான் என் சபையைக்கட்டுவேன் பாதாளத்தின் வாசல்கள் அதை மேற்கொள்வதில்லை''*** என்ற சத்தியமான தேவனுடைய வார்த்தையை ஆண்டவர் நிறைவேற்றி வந்துள்ளார். கடந்து வந்த பாதைகளை திரும்பிப் பார்க்கும் போது கர்த்தர் செய்த அதிசயங்களையும், நன்மைகளையும் எண்ணிப்பார்க்கும் போது தேவனுக்கு கோடா கோடி நன்றி என்று சொல்வதைவிட வேறு வார்த்தைகள் இல்லை. இம்மட்டும் எம்மை காத்த இஸ்ரவேலின் தேவன் முடிவுபரியந்தம் பாதை காட்டிடுவார்.

பரிசுத்த வேதாகமத்திலே 50 ஆவது ஆண்டைக்குறித்து ***லேவியராகமம் 25:8-55*** வரையுள்ள வசனங்களில் தெளிவாக காணலாம். 50 ஆண்டு யூபிலி ஆண்டு என்று வேதாகமம் சுட்டிக்காட்டுகின்றது. யூபிலி வருடம் என்றால் விடுதலையின் வருடம் எனவே இது எமக்கு விடுதலையின் வருடம். 50 ஆவது வருடத்தை யூபிலி வருடம் அல்லது விடுதல்லயின் வருடம் என ***தன்னுடைய பிள்ளைகள் இழந்து போனவற்றை திரும்ப பெற்றுக் கொள்ள வேண்டும்*** என்பதற்காகவே பிரகடனப்படுத்தினார்.

## The Year of JUBILEE - யூபிலி வருடம்

1. **யூபிலி :-**

யூபிலி **(JUBILEE)** என்ற வார்த்தை யோபேல் **(JOBEL)** என்ற எபிரேய பதத்திலிருந்து வந்தது. யூபிலி என்றால் அர்த்தம் சந்தோஷ முழக்கம் அல்லது எக்காள முழக்கம். இவ்வாறே இந்த யூபிலி வருடத்தை அறிவிப்பதும். எனவே எங்களுடைய யூபிலியை சந்தோஷ முழக்கத்துடன் அறிவிப்போமாக

2. **யூபிலி கொண்டாடப்படும் காலம் or எப்போது யூபிலி கொண்டாடப்படும் :-**

யூபிலி அதாவது விடுதலையின் வருடம் ஒவ்வொரு 50 ஆவது வருடமும் கொண்டாடப்படவேண்டும். இது அரை நூற்றாண்டைக் குறிக்கும்.

**3. யூபிலியுடன் தொடர்புடைய நிபந்தனைகள் :-**
மிக முக்கியமாக இந்த யூபிலி வருடத்துடன் தொடர்புடைய நிபந்தனைகள் மூன்று உண்டு.

**✲ விளை நிலங்களுக்கு ஓய்வு :-**

எங்களுடைய காரியங்களைவிட தேவனுடைய காரியங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். ஞாயிற்றுக்கிழமை அது கர்த்தருடைய நாள் எனவே அந்த நாளை தேவனை தொழுது கொள்ளவதற்காக பிரித்து வைக்கவேண்டும் என்று எமது தலைமைப் போதகர் **J.K.** பிலிப் அவர்கள் அடிக்கடி சொல்வார்கள், இதைத்தான் கிறிஸ்தவர்களாகிய நாம் செய்கின்றோம். கிறிஸ்தவர்களாகிய எமக்கு கர்த்தருடைய நாள் என்று சொல்கின்ற போது கட்டிலில் நன்றாக தூங்குவதை குறிப்பதில்லை அல்லது தங்களை யாரும் குழப்பக்கூடாது என்று கதவைப் பூட்டி வாழ்வது அல்ல, மாறாக இயேசுக்கிறிஸ்துவையுடைய கிறிஸ்தவனுக்கு ஓய்வு என்று சொன்னால் அது தேவனுடன் செலவிடுவதே. அதாவது தங்களுடைய சொந்த அலுவல்கள், படிப்புக்கள், வேலைகள் போன்ற காரியங்ளுக்கு முக்கியத்துவம் கொடுக்காமல் தேவனுக்கும் தேவனுக்குரிய காரியங்களுக்கும் முக்கியத்துவம் கொடுக்கவேண்டும். பரிசுத்த வேதாகமத்தில் ***மத்தேயு 6:33 இல் முதலாவது தேவனுடைய இராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள், அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக் கூடக் கொடுக்கப்படும்.*** தேடுங்கள் என்பது தொடர்ந்து ஒரு காரியத்திற்காக தேடிக் கொண்டிருத்தல் என்று பொருள்படும். எனவே தேவனுடைய இராஜ்யமும், நீதியும் ஒரு முறை தேடுகின்ற காரியம் அல்ல இது தொடர்ச்சியாக இடம்பெற வேண்டியவைகளாகும். இவைகள் என்று கூறுகின்றபோது உலக சம்பந்தமான செல்வங்கள் ஆசீர்வாதங்களைக் குறிக்கும். எனவே தேவனையும் தேவனுக்குரிய காரியங்களையும் தேடும்போது உலக ஆசீர்வாதங்கள் தானாகவே எங்களை தொடர்ந்து வரும். தேவனுக்குரிய, தேவ சபைக்குரிய முக்கியத்துவத்தை கொடுத்து ஆண்டவருக்காய் வாழ்வோம் என்று இந்த யூபிலி வருடத்திலே தீர்மானம் எடுப்போம்.

**✲ நிலங்கள் வேறு உரிமையாளர்களுக்கு விற்கப்பட்டால், அவைகள் அதன் உரிமைக்காரருக்குத் திரும்பவேண்டும் :-**

உலகத்திலே பிறந்த அத்தனை மனிதர்களையும் தேவன்தான் படைத்தார். எனவே உலகில் பிறந்த அனைவரும் தேவனுக்கு மட்டுமே சொந்தமானவர்கள். எம்மீது அவருக்கு மட்டுமே உரிமை உண்டு. ஆனால் மனிதர்களுடைய சொந்த செயற்பாடுகளால் தேவனுக்குரிய உரிமைகளை பிசாசுக்கு விற்றுப்போட்டனர். அவற்றை மீளப்பெறும் காலம் இது. மனிதனின் சொந்த பாவத்தால் இப்படி தேவனுடைய சொந்த பிள்ளைகள் என்ற ஸ்தானத்திலிருந்து மனிதர்கள் அறிந்தோ, அறியாமலோ பிசாசுக்கு தமது வாழ்வை விற்றுப்போட்டார்கள். *ஒரு சிறுவன் மிகவும் கஷ்டப்பட்டு ஒரு சிறிய கப்பலை செய்து; மழைகாலம் வருகின்றபோது விளையாட வேண்டும் என்று ஆசைப்பட்டு; ஒருவாறு கப்பலை கஷ்டத்தின் மத்தியில் செய்து முடித்து எப்பொழுது மழைவரும் என்று பார்த்த வண்ணமே இருந்தான். மழை வந்தபோது துள்ளிக் குதித்து சந்தோஷமாக கப்பலை வெள்ளத்திலே விட்டு*

*விளையாடினான். இவ்வாறு சிலநாட்கள் விளையாடிவரும் போது ஒருநாள் பலத்த காற்றுடன் அடை மழை பெய்து ஏற்பட்ட வெள்ளத்தினால் அப்படியே அவனுடைய கப்பல் அடித்துக்கொண்டுபோகப்பட்டது. வேதனை தாங்கமுடியாதவனாய் கதறி அழுது கொண்டு போய் தன் தாயாருக்கு அதை தெரிவித்தான். தாயார் அவனை சமாளிக்க முற்பட்டபோதும் அவன் செவிசாய்க்கவில்லை விடாபிடியாக அழுதுதான். சில நாட்களின் பின் தனது தாயாருடன் அவன் சந்தைக்கு போகும்போது அவன் அங்கும் இங்கும் சுற்றி எல்லா கடைகளையும் பார்த்து வருகின்றபோது அவனுடைய கண்களிலே கப்பல் தென்பட்டது. கிட்டபோய் உற்றுப் பார்த்தபோது அது தன்னால் செய்யப்பட்ட கப்பல் என்பதை அறிந்து கொண்டான். உருவாக்கினவனுக்குத்தானே தெரியும் அது யாருடையது என்பது. எனவே கடைக்காரனை பார்த்துக் கேட்டான், ஐயா இது என்னுடைய கப்பல் நான்தான் இதை உருவாக்கினேன் எனவே தயவுசெய்து இதை எனக்கு தந்துவிடுங்கள் என்றான். ஆனால் கடைக்காரன் கூறினார்; இது உன்னுடைய கப்பலோ யாருடைய கப்பலோ எனக்கு தெரியாது நான் காசு கொடுத்தே வாங்கினேன் எனவே நீ காசு தந்தால் உனக்கு தருகின்றேன் என்றார். நீண்ட நேரம் கடைக்காரனுடன் அந்த தம்பி கெஞ்சியடியால் அதை வாங்கிய விலைக்கே தருவதாக ஒப்புக்கொண்டார். அந்தப் பையன் அடுத்த கிழமை தான் வரும்வரை வைத்திருக்க சொல்லி, அந்தப் பணத்தை பெறுவதற்காக கஷ்டப்பட்டு வயல்வேலை செய்து பணத்தை சம்பாதித்துக்கொண்டு, அடுத்த கிழமை திரும்ப அந்தக் கடைக்கு வந்து கப்பலைக்கேட்ட போது கடைக்காரன் அதைக் கொடுத்துவிட்டான். அவன் அந்தக் கப்பலை கையில் ஏந்திய வண்ணம் கப்பலே.. கப்பலே.. நீ எனக்கு இரண்டு முறையில் சொந்தம். நான் உன்னை உருவாக்கியதால் முதலாவது முறை சொந்தம். நான் உன்னை காசு கொடுத்து வாங்கியதால் இரண்டாவது முறை சொந்தம் என உரிமையோடு கூறினான்.* எனவே பிரியமான சகோதர சகோதரிகளே! இயேசு மனுஷராகிய எம் எல்லாரையும் பாகுபாடு இல்லாமல் படைத்ததினால் நாம் அவருக்கு முதலாவது சொந்தம். அந்த சிறுவன் தன் சொந்த கப்பலை காசுகொடுத்து வாங்கியதுபோல நமது ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவை விட்டு தொலைந்துபோய் தங்களை அந்நிய காரியங்களுக்கும், பிசாசுக்கும் விற்றுப்போட்ட மனிதர்களை திரும்பவும் தான் வாங்கும்படி துடித்துக் கொண்டிருக்கின்றார். இந்த விடுதலை வருடத்திலாவது அதை உணர்ந் தவர்களாய் எமது வாழ்வை அறிந்தோ அறியாமலோ அந்நிய காரியத்திற்கு அதாவது தேவனுக்கு முக்கியம் கொடுக்காமல் உன்னுடைய வாழ்வு தொலைந்துபோன நிலையிலிருக்குமாக இருந்தால் அந்த இயேசுகிறிஸ்துவை நோக்கிப்பார். 2000ம் ஆண்டுகளுக்கு முன்பாகவே பூமியிலுள்ள மனிதர் களுடைய பாவத்துக்காகவும் தன்னுடைய கடைசி துளி இரத்தத்தையும் விலைக்கிரயமாக செலுத்திவிட்டார். எனவே அந்த இயேசுவை நோக்கிப்பார் அவர் திரும்பவும் இந்த யூபிலி வருடத்திலே உனக்காக காத்துக்கொண்டு உனக்கருகே ஏங்கி நிற்கின்றார். காலத்தை தாமதிக்காமல் அவரிடம் வா. உன்னை அவர் தன் சொந்தமாக ஏற்றுக்கொள்வார்.

உண்மையிலே புதிய ஏற்பாட்டு விசுவாசிகளாகிய எம்முடைய வாழ்வுக்கும் எமக்கு உண்டான அனைத்துக்கும் உரித்துடையவர் நமது

ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவே. உலகமானது உண்மையிலேயே உனக்கு உரிமை உண்டு என கூறும். ஆனால் இயேசுவிடம் வந்தால் உனக்கு உண்டான எல்லாவற்றிற்கும் சொந்தக்காரர் அவரே. நாம் வெறும் உக்கிராணக்காரர் மட்டுமே. *மத்தேயு 25:14-27* வரையான பகுதியிலே ஒரு எஜமான் தூரதேசம் போகிறபோது அவர்களுக்கு சில தாலந்துகளை ஒப்புவித்து போவதை பற்றி வாசிக்கிறோம். திரும்பி வந்து அவைகளைக்குறித்து அவர்களிடம் கணக்கு கேட்கிறார். இதே போல எமக்குள்ள தாலந்துகளுக்கும் ஒரு நாள் கணக்கு ஒப்புவிக்க வேண்டும். அவை எங்களுடையவைகள் அல்ல, மாறாக அவை தேவனுடையவை. அதை தேவனுக்கு என்றே பயன்படுத்த வேண்டும். உதாரணமாக உனக்கு இசை விளையாடும் தாலந்தை தேவன் கொடுத்திருந்தால் தேவ பக்திக்குரிய இசை விளையாடு வதற்கே அவற்றை பயன்படுத்த வேண்டும். சினிமா இசைக்கோ உலக சம்பந்தமான இசைக்கோ உன்னுடைய தாலந்தை கொடுக்கக்கூடாது. இவ்வாறு செயற்படுவோமாயிருந்தால் ஆண்டவர் இந்த யூபிலி வருடத்தில் பிசாசின் பிடியிலிருந்தும் அன்னிய காரியத்திலிருந்தும் விடுதலையாக்கி தன்னுடைய சொந்தமாக உன்னை மாற்ற அவர் ஆயத்தமாக இருக்கிறார். நீ ஆயத்தமா?

**✲ அடிமைக்கு விடுதலை:-**

எவற்றிற்கெல்லாம் அடிமைப்பட்டிருக்கிறோமோ அவற்றிற்கெல்லாம் விடுதலை உண்டாகும் வருடம் தான் யூபிலி வருடம். பாவத்துக்கு அடிமைப் பட்டிருக்கிறாயா? சுயத்துக்கு அடிமைப்பட்டிருக்கிறாயா? சாபத்திற்கு அடிமைப் பட்டிருக்கிறாயா? வியாதிக்கு அடிமைப்பட்டிருக்கிறாயா? ஜென்ம சுபாவத்திற்கு அடிமைப்பட்டிருக்கிறாயா? எப்படியாயிருந்தாலும் இயேசுவிடம் வந்தால் உனது வாழ்வுக்கும் யூபிலி. ***யோவான் 8:36 சொல்கிறது ''ஆகையால் குமாரன் உங்களை விடுதலையாக்கினால் மெய்யாகவே விடுதலையாவீர்கள்''.*** எங்களுடைய வாழ்வு எதற்கு அடிமைப்பட்டிருந்தாலும் எமக்கு யூபிலி தேவையாயிருந்தால் அதற்கு ஒரே ஒரு வழி மாத்திரம் தான். அது குமாரனாகிய இயேசு கிறிஸ்து மாத்திரமே. ***யோவான் 14:6 இல் இயேசு கூறுகிறார் ''நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன்''.*** எனவே இந்த இயேசுவிடம் தஞ்சமடைந்து விடுதலை பெற்றுக்கொள்ளுங்கள்.

**4. யூபிலி ஸ்தாபித்ததின் நோக்கம் :-**

மனித குலத்திற்கு ஏற்படும் தீமையான காரியங்களில் இருந்து மீட்பு பெற்றுக்கொடுக்கும் முகமாக ஸ்தாபிக்கப்பட்டதே யூபிலி வருடம்.

**5. யூபீலி கொண்டாடப்படும் முறை :-**

கொண்டாடப்படும் முறை குறித்து பரிசுத்த வேதாகமத்தில் அதிகமாக ஏதும் குறிப்பிடாவிட்டாலும் இந்த யூபிலி எக்காள முழக்கத்துடன் கொண்டாடப் படவேண்டும் என்றே குறிப்பிடுகின்றது. இது மகிழ்ச்சியை வெளிக்காட்டும் கொண்டாட்டமாகும். வேதம் சொல்லுகிறது மனந்திரும்புகிற ஒரு பாவியின் நிமித்தம் பரலோகத்தில் மிகுந்த சந்தோஷம் உண்டாகிறது. எனவே உங்களுடைய வாழ்க்கைக்கு உள்ளாக இயேசுகிறிஸ்து வந்து அவர் உங்களை

ஆளுகை செய்கிற நாள் வெற்றிமுழக்கமிடும் நாள். எனவே உண்மையாகவே இந்த நாளில் உங்களுடைய வாழ்க்கையின் உண்மையான நிலையினை உணர்ந்து மனந்திரும்புவீர்களாயிருந்தால் உங்களுக்கு கொண்டாட்டமே.

*ஏசாயா 61:1-3 ''கர்த்தராகிய தேவனுடைய ஆவியானவர் என்மேல் இருக்கிறார். சிறுமைப்பட்டவர்களுக்கு சுவிஷேசத்தை அறிவிக்க கர்த்தர் என்னை அபிஷேகம் பண்ணினார். இருதயம் நொறுங் குண்டவர்களுக்கு காயம் கட்டுதலையும், சிறைப்பட்ட வர்களுக்கு விடுதலையையும், கண்டுண்டவர்களுக்கு கட்டவிழ்த்தலை கூறவும் கர்த்தருடைய அநுக்கிரக வருஷத்தையும் நம்முடைய தேவன் நீதியை சரிக்கட்டும் நாளையும் கூறவும், துயரப்பட்ட அனைவருக்கும் ஆறுதல்செய்யவும், சீயோனிலே துயரப்பட்டவர்களை சீர்ப்படுத்தவும், அவர்களுக்கு சாம்பலுக்குப் பதிலாக சிங்காரத்தையும், துயரத்துக்கு பதிலாக ஆனந்த தைலத்தையும், ஒடுங்கின ஆவிக்குப் பதிலாக துதியின் ஆடையைக் கொடுக்கவும் அவர் என்னை அனுப்பினார். அவர்கள் கர்த்தர் தம்முடைய மகிமைக்கு என்று நாட்டின நீதியின் விருட்சம் எனப்படுவார்கள்".* மேற்குறிப்பிட்ட வசனங்களில் கர்த்தருடைய அநுக்கிரக வருஷத்தைக் குறித்து தெளிவாகக் காணலாம். மேசியாவைக் குறித்து கூறப்பட்ட மேற்படி வசனங்களில் அவரது ஊழியத்தையும் வெளிப்படுத்துகிறது. ஏசாயா இதில் இயேசுவின் ஆவிக்குரிய குணாதிசயங் களை நேரிடையாக கூறுகிறார். இயேசு தமது ஊழிய ஆரம்ப நாட்களில் ***(லூக்கா 4:18-19)*** இவ் வசனம் தம்மைப்பற்றிக் கூறியதைக் காண்பிக்கிறார். இயேசுவினுடைய அபிஷேக ஊழியத்தில்

1. தரித்திரர், தாழ்மையானவர்கள், ஒடுக்கப்பட்டவருக்கு சுவிசேஷம் அறிவித்தல்.
   எமது சீயோன் சபையின் தரிசனமும் நோக்கமும் இதுதான்.
2. சரீரத்திலும், ஆவியிலும் பெலவீனருக்கும் விடுதலை
3. பாவம், பிசாசு இவற்றின் கட்டுக்கள் முறிக்கப்படுதல்.
4. இழந்து போனவர்களின் மனக்கண்கள் திறக்கப்பட்டு வெளிச்சம் காண்பதும் அடங்கியிருக்கிறது.

இந்த நான்கு வித விடுதலை ஊழியங்களும் இயேசுவால் நடத்தப்பட்டது மாத்திரமன்றி, தேவ சபையானது இவ் உலகிலே இருக்குமட்டும் தொடர்ந்து நடைபெறும். எனவே தேவனுடைய ஆவியானவர் எங்கள் மேல் இருப்பதால் இப்படிப்பட்ட எல்லா சூழ்நிலையிலுள்ள எல்லா மக்களுக்கும் யூபிலி. அதாவது விடுதலை வருடத்தில் தேவன் விடுதலை கொடுக்க ஆயத்தம்.

*ரோமர் 6:18 ''பாவத்திலிருந்து நீங்கள் விடுதலையாக்கப்பட்டு நீதிக்கு அடிமைகளானீர்கள்''.* இது ஒரு நடந்துகொண்டிருக்கிற அல்லது நிகழ்கால வாக்கியம். அத்தோடு முதல் பகுதிக்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்கிற செயல். பாவத்துக்கு அடிமைகளாக இருந்தால் ஒரு போதும் நீதிக்கு அடிமைகளாக இருக்கவே முடியாது. இரண்டு தோணியில் கால் வைக்கவே முடியாது. நீதிக்கு அடிமையாக வாழவேண்டும் என்று தீர்மானம் எடுத்தால் பாவத்தை விட்டு விடுதலையாக்கப்படவேண்டும். ஆனால் நீதிக்கு

அடிமையாக விரும்பவில்லையென்றால் பாவத்தை விட்டுவிடவே முடியாது. ஏதாவது ஒன்றை தெரிந்துகொள்வது உங்கள் கடமையாகும்.

*ரோமர் 1:18 ''சத்தியத்தை அநியாயத்தினாலே அடக்கி வைக்கிற மனுஷனுடைய எல்லாவித அவபக்திக்கும் அநியாயத்திற்கும் விரோதமாய் தேவகோபம் வானத்திலிருந்து வெளிப்படுத்தப் பட்டிருக்கிறது".* எனவே அன்பார்ந்தவர்களே தெளிவாக தேவ சத்தியத்தை அறிந்து கொண்டீர்கள். இதை கேட்டும் உணராதவர்களாய் அநியாயத்தினாலே இன்னும் உங்களது வாழ்வை அடக்கி வைத்து யூபிலி விடுதலை தேவை யில்லை என வாழ்வாயாக இருந்தால் உண்மையில் தேவகோபம் வெளிப்படுத்தப பட்டிருக்கிறது. சில பாவங்களில் இருந்து விடுதலையும் சில பாவங்களில் இருந்து விடுதலையுமற்ற நிலையில் **''வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது"** என்ற சொல் கடந்த அல்லது இறந்த காலத்தில் பயன்படுத்தப்பட்டிருக்கிறதை காணலாம். தேவனுடைய கோபமானது தனிப்பட்ட மக்களின், தேசத்தின், தேவனுடைய மக்களின் உண்மையற்ற தன்மையினாலும் தூண்டப்படுகிறது. எனவே இந்த அருமையான வேளையிலும் தேவன் நமக்கு முன் இரண்டு காரியங்களை வைக்க விரும்புகிறார். ***உபாகமம் 11:26 ''இதோ இன்று நான் உங்களுக்கு முன்பாக ஆசீர்வாதத்தையும், சாபத்தையும் வைக்கிறேன்".*** தமது மக்கள் கவனமாக வாழவேண்டும் என்பதற்காக அவர்களுக்கு ஏற்படக்கூடியவற்றை தேவன் முன்னறிவித்தார். உலகத்தாரின் பாவங்களிலிருந்து விலகி என்னுடைய வாழ்க்கையிலே விடுதலை தேவை என்று உணர்ந்து தேவனுக்கு கீழ்படிகிறவர்களாக உங்களுடைய வாழ்க்கையை அர்ப்பணித்தால் தேவனுடைய ஆசீர்வாதம் உங்களுடைய பங்காக மாறும். இப்படி வாழத்தவறினால் தேவனுடைய சாபம் அதாவது அவருடைய கோபம் உங்கள் மேல் வரும். ஆசீர்வாதத்தையும் சாபத்தையும் ஆண்டவர் எமக்கு முன் வைத்து நாம் சுயமாக ஏதாவது ஒன்றை தெரிந்தெடுக்கும் வாய்ப்பை கொடுக்கிறார்.

எனவே பிரியமானவர்களே இச்சபையின் வரலாற்று முக்கியத்துவமான இந்த வேளையில் உங்களுடைய வரலாற்று முக்கியத்துமான யூபிலி விடுதலையை எல்லா தேவ பிள்ளைகளும் பெற்றுக்கொள்ள வேண்டும் என்று ஆண்டவர் விரும்புகிறார். தெரிவு உங்களுடையது. சரியானதை தெரிந்து எடுத்து தேவ ஆசீர்வாதத்தை பெற்றுக்கொண்டு சந்தோஷமுழக்கமாக உங்கள் சொந்த வாழ்வின் யூபிலியை கொண்டாடுங்கள்.


"தேவன் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக".

**போதகர் ஜோஹனன் டேவிஸ் பிலிப**

*நிறைவேற்றுப் போதகர்*

*சீயோன் தேவாலயம் - யாழ்ப்பாணம்.*

# சீயோன் தேவாலயம்




1959 ஆண்டு கந்தர் மடத்தில் கர்த்தருக்குள் நித்திரையடைந்த போதகர் C.P.D. அருமைநாயகம் அவர்களால் ஆரம்பிக்கப்பட்டு; பின்பு பல இடங்களுக்கு இடம்மாறி இறுதியாக 1972ம் ஆண்டு இல,24, இராமையா செட்டியார் ஒழுங்கையில் தற்காலிகமான கட்டடத்தை அமைத்து ஆராதனை நடத்தினோம். பின்பு 1985ம் ஆண்டு நிரந்தர கட்டடமாக கட்டப்பட்டது. தற்போது தொடர்ச்சியாக ஆராதனை நடைபெற்று வருகின்றது. கர்த்தருடைய கிருபையால் ஊழியங்கள் வளர்ச்சி யடைந்து, 23 கிளைச் சபைகளுடன் கர்த்தருடைய ஊழியம் நடைபெற்று வருகின்றது. தரித்திரருக்கு சுவிஷேஷம் அறிவிப்பது எமது நோக்கமாகும். கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்து சீக்கிரம் வருவார்; அவருடைய வருகைக்கென ஒரு கூட்டம் ஜனங்களை ஆயத்தப்படுத்துகின்றோம்.

# சந்தா விபரம்

இச்சஞ்சிகையைத் தொடர்ந்து பெற விரும்புகிறவர்கள் உங்களது பெயரையும் விலாசத்தையும் தெளிவாக எழுதி சந்தாப்பணத்துடன் ஆசிரியருக்கு அனுப்பினால் சந்தாதாரர்களாகச் சேர்க்கப்படுவீர்கள்.

## சந்தா விபரம், (தபால் செலவு உட்பட)

| | |
|---|---|
| இலங்கை | S.L. Rs 130.00 Per Year |
| இந்தியா | S.L. Rs 250.00 Per Year |
| கனடா, அமெரிக்கா | S.L. Rs 400.00 Per Year |
| மற்றைய எல்லா நாடுகளும் | S.L. Rs 350.00 Per Year |

(காசோலை, காசுக்கட்டளை "சீயோன் தேவாலயம்" / "ZION CHURCH" என எழுதப்பட வேண்டும்.

குறிப்பு : தற்போது ஏற்பட்டுள்ள கடதாசியின் விலையேற்றம், தபால் செலவு அதிகரிப்பு என்பவைகள் காரணமாக சந்தா அதிகரிக்கப்பட்டுள்ளதை தெரிவித்துக் கொள்கின்றோம். நன்றி.

- ஆசிரியர் -

சந்தாதாரராக விரும்பின் கூப்பனை தயார் செய்து அனுப்பவும்.

## சந்தா கூப்பன்

பெயர் : ____________________

விலாசம் : ____________________

____________________

____________________

____________________

தயவுசெய்து சந்தா பணத்தையும் சேர்த்து அனுப்பவும்.

To.

Miss. MATHANA GNANACHANDRAN,
MADATHTHADY
ALVAI EAST,
ALVAI




**Zion Church Office**
**No. 347. Navalar Road,**
**Jaffna, Sri Lanka.**

*St. Joseph's Catholic Press, 360. Mair. Street,*
*Jaffna, Sri Lanka. T. P. 021-222 2378*